புரட்சிப்
# பெரியார் முழக்கம்



www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • ஏப்ரல் (April) 02, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 14 • விலை(PRICE) ரூ.6.00

## அகில இந்திய ஒதுக்கீடுகளுக்கு திமுக எதிர்ப்பு!




*‘குலத்துக்கு ஒரு நீதி என்பது அநீதியே’ என்பதை முழங்கி எழுந்ததே திராவிட இயக்கம். “சமூகநீதி என்பது சமுதாயத்தில் முன்னே உயர்ந்தவர்களை கீழே இறக்கி விடுவது அல்ல. பள்ளத்தை சமப்படுத்தி மேடு ஆக்குவதே சமூகநீதி எனப்படும் இடஒதுக்கீடு” என விளக்கினார் தந்தை பெரியார்.*

*இட ஒதுக்கீடு எனப்படும் சமூகநீதிக் கொள்கையானது யாராலும் கைவைக்க முடியாத கொள்கையாக மாற திராவிட இயக்கத்தின் தொடர் போராட்டங்கள் தான் காரணம். இது இந்திய அரசமைப்புச் சட்டம் ஏற்றுக்கொள்ளும் கொள்கையாக மாறவும் திராவிட இயக்கத் தலைவர்களின் போராட்டமே காரணம். இன்று அகில இந்தியா முழுமைக்கும் இக்கொள்கை நடைமுறைக்கு வர முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடே இருந்தது.*

*சமூகநீதி கண்காணிப்புக் குழு அமைத்தது திராவிட மாடல் அரசு. இதன் தொடர்ச்சியாக மேலும் பல முன்னெடுப்புகளை எடுக்க வேண்டியது அவசியம் என திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது. இதன் தொடர்ச்சியாக, திராவிட மாடல் 2.0 ஆட்சியில் இடஒதுக்கீட்டை முழுமையாக எல்லா நிலைகளிலும் நடைமுறைப்படுத்திட அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம் என வாக்குறுதி அளித்துள்ளது. இடஒதுக்கீடு கண்காணிப்பு ஆணையம் அமைக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.*

- *உயர்நீதிமன்ற நீதியரசர்கள் நியமனத்தில் சமூக நீதியை நிலைநாட்டிட இடஒதுக்கீடு முறையைக் கொண்டு வருவதற்குத் தேவையான அரசியல் சட்டத்திருத்தம் மேற்கொள்ள ஒன்றிய அரசை வலியுறுத்துவோம்.*
- *ஒன்றிய அரசின் உயர்பதவிகளிலும், பொதுத்துறை நிறுவனங்கள், அய்.அய்.டி., அய்.அய்.எம்., எய்ம்ஸ், தேசிய சட்டப்பள்ளிகள் போன்ற உயர்கல்வி நிறுவனங்களிலும் மண்டல் கமிஷன் பரிந்துரைப்படி இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இடஒதுக்கீடு முழுமையாக நிறைவேற்றப்படாத அநீதியை எதிர்ப்போம்.*
- *சட்டபூர்வமாகத் தரப்பட்டுள்ள இடஒதுக்கீடு எண்ணிக்கையானது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும்; அது தொடர்ந்து கண்காணிக்கப்படும்.*
- *ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகிய மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை உயர்த்தப்படும்.*
- *ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் பெண்களுக்கான தொழில்வாய்ப்புகளைப் பெருக்குவதற்கான திட்டங்கள் விரிவுபடுத்தப்படும்.*
- *தமிழ்நாட்டிலுள்ள மருத்துவக் கல்லூரிகளில் அகில இந்திய ஒதுக்கீடு நடைமுறையை மாற்றி, அதற்குப் பதிலாக மாநில அரசின் இடஒதுக்கீடு கொள்கையைப் பின்பற்றிட ஒன்றிய அரசை வலியுறுத்துவோம்.*
- *தேசிய மக்கள்தொகைக் கணக்கெடுப்புடன் எடுக்கப்படவுள்ள ஜாதிவாரிக் கணக்கெடுப்பின் தரவுகளின் அடிப்படையில் உரிய பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கான வழிவகை செய்யப்படும்.*
- *ஆண்டுக்கு ரூ. 20 இலட்சத்திற்கு மேல் ஊதியம் பெறும் உயர்நிலைப் பணி வாய்ப்புகளை ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்கு வழங்கும் தனியார் நிறுவனங்களுக்கு முதலீட்டு ஊக்க மானியம் மற்றும் இதர சலுகைகள் வழங்கப்படும்.*

***– திமுக 2026 தேர்தல் அறிக்கையிலிருந்து***

## பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லையா?

***தமிழ்நாட்டில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற ஒரே குற்றச்சாட்டையே அஇஅதிமுக, தவெக கூறி வருகின்றனர். இதற்கு ஒரு ஆணித்தர மறுப்பு!***

*பாஜக ஆளும் மாநிலங்களை விட தமிழ்நாடு மோசமான நிலையில் உள்ளது என தமிழ்நாடு பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கூறி வருகிறார். தேசிய குற்ற ஆவணக் காப்பகம் 2023 பதிவின்படி இந்தியாவில் நிகழ்ந்த பெண்களுக்கு எதிரான குற்றங்களில் முதலிடம் உத்தரப்பிரதேசம் 66381 சம்பவங்கள் நடந்துள்ளது. இரண்டாவது இடத்தில் மகாராஷ்டிரா -47101 சம்பவங்கள் நிகந்துள்ளது. மூன்றாவது இடத்தில் ராஜஸ்தான் -45450 வன்கொடுமைகள் நிகழ்ந்துள்ளது. முதல் 10 இடங்களில் பாஜக ஆளும் மாநிலங்களில் தான் அதிகமாக பெண்களுக்கு கொடுமைகள் நடந்துள்ளது. தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ள தகவல்களின் மூலம் தெரியவந்துள்ளது.*

*குஜராத்தில் 2016-2021 வரை காணாமல் போன பெண்கள் எண்ணிக்கை 41,627. 2021-ம் முதல் தற்போது தேசிய குற்றப்பதிவேட்டில் NCRB குஜராத் பதிவுகளே இல்லை. ஒரு நாட்டின் பிரதமரின் சொந்த மாநிலத்தில் தேசிய குற்ற ஆவணக் காப்பகப் பதிவுகளே இல்லை. இதற்கு பிரதமர் பதில் சொல்வாரா?..*

*ஆண்டுக்கு 10,000-க்கும் மேற்பட்ட பெண்களைக் காணவில்லை. உத்தரப்பிரதேசத்தில் கடந்த 2023-2024 ஆண்டில் மட்டும் காணாமல் போனவர்கள் 1,08,300 பேர். 2016-2021 ஆண்டில் டெல்லியில் 51,433 பேர் காணாமல் போனவர்கள். 2025 ஆண்டில் மட்டுமே 23,000 பெண்கள் காணாமல் போனதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. இதில் கொடுமையானது 4,000-மேற்பட்ட பெண்குழந்தைகள்.*

*பெண்கள் காணாமல் போவது பற்றி எந்த வித அக்கறையும் காட்டாமல் தொடர்ந்து பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வரும் பாஜக ஆளும் மாநிலங்கள் பற்றி வாய் திறக்காமல் தமிழ்நாட்டில பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று கூப்பாடு போடும் எடப்பாடி, விஜய் ஆகியோர் தலைநகரில் டெல்லியில் நடக்கும் இந்த அவலங்களைப் பேச மறுப்பது ஏன்? கூட்டணி உடன்பாடா இல்லை அதற்கெல்லாம் திமுக காரணம் என்று சொல்ல முடியாது என்ற அற்ப அரசியலா?.*

*2024-ல் இந்தியாவில் போதைப் பொருள் புழக்கம் குறித்து மாநில வாரியாக புள்ளி விவரங்கள் பார்த்தோமேயானால் தமிழ்நாட்டில் அபின், மார்பின் போன்ற போதைப் பொருட்கள் இல்லை என்று தெரிவிக்கிறது. ஆனால் ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், பஞ்சாப், குஜராத், ஹரியானா போன்ற மாநிலங்களில் அபின் அதிக அளவில் புழக்கத்தில் உள்ளது. அதே போல் மகாராஷ்டிராவில் மார்பின் போதைப் பொருள் அதிக அளவில் புழக்கத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.*

*2024-ல் போதைப் பொருள் குறித்து பதிவான வழக்குகள் தமிழ்நாட்டில் 481 தான். ஆனால் கேரளாவில் 27701, மகாராஷ்டிராவில் 14553, உத்திரப் பிரதேசத்தில் 6204 வழக்குகளும் பதிவாகியுள்ளன.*

*ஒன்றிய அரசின் புள்ளிவிவரங்கள் அடிப்படையில் பாஜக ஆளுகின்ற மாநிலங்களில் தான் போதைப் பொருள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருகின்றன என தகவல்கள் தெரிவிக்கின்றன. பொய்களைப் பரப்பும் அணில்களும் அடிமைகளும், அதன் ஏஜெண்டுகளும் கொஞ்சம் அடக்கி வாசிப்பது நல்லது.*

## திமுக தேர்தல் அறிக்கையின் சிறப்பு:
## அரசுத்துறை கெடுபிடிகள் எளிமையாக்கப்படும்

*ஒற்றைச் சாளரத்தின் (Single Window) வழியே அனைத்து சேவைகளும் வழங்கப்படும். இருந்த இடத்தில் இருந்தபடியே இணையத்தில் ஒரு சாளரத்தைத் திறந்து, தங்களுக்குத் தேவையான சேவையைச் சுட்டிச் சொடுக்கினால், அதற்கான தகவல்களுடன் விண்ணப்பப் படிவமும் வழங்கப்படும். அதனை நிரப்பி பதிவேற்றம் செய்தால் விண்ணப்பத்தை பெற்றுக் கொண்டதற்கான சான்று அப்போதே அளிக்கப்பட்டு விரைவில் கோரிய சேவையும் நிறைவேற்றப்படும். கணினித் தொழில்நுட்பத்தின் மூலம் அரசு சேவை வழங்குவதை இத்தகைய நடைமுறை மூலம் எளிமையாக்க உறுதியளிக்கிறோம் இதன் தொடர்ச்சியாக திராவிட மாடல் 2.0 ஆட்சியில்....*




- *அரசு விதிமுறைகள் சான்றுகள் ஆகியவற்றில் எவை தற்காலத்தில் தேவையற்றவை என்று ஆய்வு செய்து அவற்றை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*
- *அரசு வழங்க வேண்டிய சேவைகளில் மக்கள் சந்திக்கும் குறைபாடுகளை கோரிக்கை மனுவின் நிலை ஆகியவற்றை ஒரு சாளரத்தின் (Single Window) வழியை எடுத்துக் கூறித் தேர்வு பெறும் நடைமுறை உருவாக்கப்படும்.*
- *பொதுமக்களுக்கு அரசிடம் இருந்து தேவைப்படும் சேவைகளை எளிமையாகப் பெரும் வகையில் ஒரு பெரும் செயலி (Super App) உருவாக்கப்படும். அனைத்துச் சேவைகளும் உங்கள் விரல் நுனியில் என்ற கனவு இதன் மூலம் மெய்ப்படும்.*
- *பொதுமக்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு அரசுத் துறைகளில் இருந்து தேவைப்படும் பல்வேறு சேவைகளை எளிமையாக்கிடும் வகையில் 1000 அரசு சேவைகளின் நடைமுறை மாற்றி அமைக்கப்படும். சான்றிதழ்கள் தடையில்லாச் சான்று உள்ளிட்ட அனைத்தும் இவற்றுள் அடங்கும்.*
- *சான்றிதழ்களை இணையத்திலேயே (online certification) பெற்றுக் கொள்ளும் வகையில் அரசின் இணைய சேவை மேம்படுத்தப்படும்.*
- *மக்களுக்கான அரசுத் திட்டங்களின் செயல்பாடுகளைப் பற்றி அனைவரும் அறிந்து கொள்ளத் தேவையான தகவல்கள் அனைத்தும் தொடர்புடைய அலுவலகங்களில் மின்னணு தகவல் பலகைகள் வாயிலாக அறியும் வசதி உருவாக்கப்படும்.*
- *அரசுத் துறைகளில் ஒவ்வொரு முறையும் சான்றிதழ் கேட்டுப் பெறும் முறை தவிர்க்கப்படும். பெறப்படும் சான்றிதழ்கள் ஒரு தொகுப்பாக (digilocker) போன்ற அமைப்பின் உதவியுடன் சேமிக்கப்பட்டு பாதுகாக்கப்படும். உரியவரோ அல்லது அவரது அனுமதியுடன் தேவைப்படும் அரசுத் துறையோ அதனைப் பெறும் வசதி உருவாக்கப்படும். இதன் மூலம் நேரமும் மனித உழைப்பும் வீணடிக்கப்படுவது தவிர்க்கப்படும்.*
- *அரசின் சேவைகளைப் பெறுவதற்கு பொதுமக்கள் அதிகம் அணுகக் கூடிய அலுவலகங்களில் வெளிப்படைத் தன்மையும் சேவைகள் விரைவாக கிடைப்பதும் உறுதி செய்யப்படும். கிராம நிர்வாக அலுவலகம் முதல் தலைமைச் செயலகம் வரை உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும் 100 விழுக்காடு மின்னணு அலுவலக நடைமுறை செயல்படுத்தப்படும்.*
- *அரசுத்துறை மட்டுமே தரச் சான்றளிக்கும் முறை மாற்றி அமைக்கப்பட்டு நிபுணத்துவம் வாய்ந்த நபர்களைக் கொண்ட மூன்றாம் தரப்பு ஆய்வு செய்து சான்று அளிக்கும் முறை அரசுத் துறைகளில் படிப்படியாக அறிமுகம் செய்யப்படும்.*
- *விதிமுறைகளை ஏற்று விண்ணப்பதாரர்கள் வழங்கும் சான்றிதழ்களை ( compliance certificate) அரசுத்துறை அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்து ஏற்கும் முறை எல்லா சூழ்நிலைகளிலும் தேவையற்றது. பொதுமக்களே தாங்கள் விதிமுறைகளை ஏற்று இணங்கி நடப்பதாக வழங்கிடும் சுய சான்றுகளை (self certification) ஏற்கும் முறை அறிமுகப்படுத்தப்படும். தேவைப்படும்போது மட்டுமே அரசுகள் ஆய்வு மேற்கொள்ளும் இவ்வகையில் நம்பிக்கை சார்ந்த ஆளுமை முறை மாநில நிர்வாகத்தில் வளர்த்தெடுக்கப்படும் என்று உறுதியளிக்கிறோம்.*
- *பொதுமக்களுக்கு இன்றியமையா சேவைகளை வழங்கும் அரசுத் துறைகளான பத்திரப்பதிவுத்துறை போக்குவரத்துத் துறை போன்ற துறைகள் அனைத்தும் நவீன தொழில்நுட்பத்துடன் முற்றிலும் மாற்றியமைக்கப்படும். பொதுமக்கள் தங்களுக்கு தேவைப்படும் சேவையைப் பெறுவது எளிமையாக காலவிரயம் இன்றி நடந்தேற இம்முயற்சிகள் உதவும்!*

***– திமுக 2026 தேர்தல் அறிக்கையிலிருந்து..***

தலையங்கம்

# அழகிரி எனும் அஞ்சா நெஞ்சன்!

பெரியார் இயக்கத்தின் போர் படைத் தளபதி பட்டுக்கோட்டை அழகிரிசாமி. அழகிரி அவரது நினைவு போற்றும் கூட்டங்களை பெரியார் இயக்கங்கள் நடத்தி வருகின்றன. அவர் பெயரோடு பிரிக்க முடியாது இணைந்து நிற்பது "அஞ்சா நெஞ்சன்" என்ற பட்டம். பேச்சிலும் செயலிலும் இதை உறுதிப்படுத்தியவர். முதல் உலகப் போரில் இராணுவத்தில் சேர்ந்தார். படையிலிருந்து விடுவித்துக் கொண்டு பட்டுக்கோட்டையில் தனது சித்தப்பா வேணுகோபால் இல்லத்தில் தங்கினார். அப்போது நெற்றியில் நாமம் தரித்து கதர் ஆடை உடுத்தி காந்தியின் சீடராக இருந்தார். அக்காலகட்டத்தில் காங்கிரஸ் கட்சியில் வ.வே.சு அய்யர் காங்கிரஸ் நிதியில் நடத்திய சேரன் மாதேவி குருகுலத்தில் நிகழ்ந்த வர்ணாஸ்ரம கொடுமைக்கு எதிராக காங்கிரஸ் தலைவராக இருந்த பெரியார் போர்க்கொடி உயர்த்திய காலகட்டம். இந்த சம்பவம்தான் அழகிரி கண்களைத் திறந்தது. பெரியாரின் பார்ப்பனர் அல்லாதார் போராட்டங்களின் நியாயங்களை உணர்ந்தார். பெரியாரைத் தலைவராக ஏற்றுக் கொண்டார்.

அவரது வலிமையான ஆற்றல்மிகு மேடைப்பேச்சுக்கள் தமிழ்நாட்டை அதிர வைத்தன. அவரது கூட்டங்களில் அன்றைய காங்கிரஸ்காரர்கள் 'காலிகளைப்' பிடித்து வன்முறைகளை ஏவினர். கல்லடி, குழப்பங்களை எதிர்கொண்டு சிங்கமாக கர்ஜித்தார். அவரது உரையைக் கேட்டு கலவரம் செய்ய வந்த "காலிகள்" மனம் திருந்திய வரலாறுகளும் உண்டு. கலைஞரை திராவிடர் இயக்கம் நோக்கி திரும்ப வைத்தது அழகிரியின் பேச்சுதான். நடிகவேள் எம். ஆர்.ராதா நடத்திய 'தூக்குமேடை' நாடகம் கடும் எதிர்ப்புகளைச் சந்தித்தது. அதற்கு கதை வசனம் எழுதியவர் கலைஞர். தஞ்சையில் அந்த நாடகத்திற்கு தலைமை தாங்கிய அழகிரி நாடகத்திலே கூர்மையான வசனங்களை பாராட்டி அதுவரை கருணாநிதியாக இருந்த கலைஞருக்கு 'கலைஞர்' என்ற பட்டத்தை சூட்டினார். அந்தப் பெயரே இன்றுவரை வரலாற்றில் பதிந்து நிற்கிறது. பெரியார் உள்ளிட்ட அனைத்து தலைவர்களையும் தோழர் என்று அழைத்தவர். ஏழ்மையான வாழ்க்கைதான் ஆனால் சுயமரியாதையில் கம்பீரம். பெரும் செல்வந்தரான நீதிக்கட்சித் தலைவர் பொப்பிலி அரசரிடம் சரிசமமாக அமர்ந்து பேசுவார். பெரியாருக்கு எதிராக நீதிக் கட்சித் தலைவர்கள் உருவாக்கிய குழப்பங்களை முறியடித்தவர்.

1938 ஆம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் தளபதி. அன்றைய முதல்வர் ராஜகோபாலாச்சாரி பள்ளிகளில் இந்தியைக் கட்டாயம் ஆக்கினார். பெரியார் போர்ச் சங்கு ஊதினார். பெரியாரின் தளபதி அழகிரி களமிறங்கினார். திருச்சி உறையூரில் இருந்து 1938 ஆகஸ்ட்-1ம் தேதி படை ஒன்று புறப்பட்டது. நடந்தே பயணம். நல்ல உடல் கட்டுள்ள 100 இளைஞர்களை தேர்வு செய்தார் அழகிரி. படையின் கட்டளைத் தலைவர் (சேனாதிபதி). 577 மைல்கள் 42 நாட்களில் நடந்தே கடந்தது அந்த பயணம். செப்டம்பர் 11-ல் சென்னை வந்தடைந்தது. இந்தி எதிர்ப்பு உணர்வை 4 இலட்சம் மக்களிடம் கடத்தியது. கடுமையான மழைக் காலம் கொட்டும் மழையிலும் பரப்புரை நடந்தது. கொள்ளிடம் ஆற்றை படகில் கடந்தார்கள். பெண்ணை ஆற்றை வயிற்றளவு தண்ணீரில் நீந்த வேண்டி இருந்தது. மழையிலும் நனைந்து நடந்தார்கள். பலருக்கு உடல்நலம் பாதித்த போதும் இலட்சிய பயணம் தொடர்ந்தது.




அழகிரியின் கட்டளையை ஏற்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல் ஒன்றை எழுதினார். அந்த பாடல் தான் " எப்பக்கம் வந்து புகுந்துவிடும் இந்தி" என்று காலத்தால் உயர்துடிப்போடு நிற்கும் பாடல். அழகிரி வரலாற்றில் பதிவான மற்றொரு நிகழ்வு உண்டு. அதுதான் கானாடுகாத்தான் என்ற ஊரில் நடந்த தோளில் துண்டு போடும் உரிமைக்கான போராட்டம். திருமண ஊர்வலத்தில் நடந்த நாதஸ்வர மேதை மதுரை சிவக்கொழுந்து துண்டு ஒன்றைத் தோளில் போட்டு நாதஸ்வரம் வாசித்து வந்தார். நாதஸ்வரம், தவில் வாசிப்பவர்கள் சூத்திரர்கள் தான். பார்ப்பனர்கள் கடும் உடல் உழைப்புக்குரிய இந்தக் கலையின் பக்கம் திரும்பவே மாட்டார்கள். அதுவும் மேல் சட்டை அணியாமல் வாசிக்க வேண்டும்.

அப்போது ஒரு ஜாதிக் வெறி குரல் கேட்டது 'துண்டைத் தோளில் இருந்து எடு!' என்றது அந்தக் குரல். அழகிரி வெகுண்டெழுந்து துண்டை எடுக்காதே என்றார். திருமண ஊர்வலம் நகரவில்லை பாதியில் நின்றது.அப்போது பெரியார் அதே திருமணத்துக்கு வந்திருந்தார். வேறு ஒரு இடத்தில் தங்கி இருந்தார். அவரிடம் நேரில் சென்று பேசினார் அழகிரி. பிறகு திரும்பி வந்து துண்டை தோளில் போடு; இடுப்பில் கட்டாதே என்று கூறி திருமண ஊர்வலம் நிறைவடையும் வரை சிவக்கொழுந்துவின் வியர்வையைத் தடுக்க விசிறியை எடுத்துக் கொண்டு வீசினார் அழகிரி. 1948-ல் மதுரை கருஞ்சட்டை படை மாநாட்டிற்கு பார்ப்பனர்களும் அவரது கூலிகளும் தீ வைத்தனர். அழகிரி மாநாட்டில் பேசும் போதுதான் இந்த வன்முறை நடந்தது.1929-ல் செங்கல்பட்டில் நடந்த சுயமரியாதை மாநாட்டில் அழகிரி இடி முழக்கம் செய்தார். அவரது வரலாற்று பக்கங்களில் வீரம்செறிந்த நிகழ்வுகள் ஏராளம் உண்டு.

எலும்புகளை அரிக்கும் (T.B) நோயால் கடுமையாக பாதிக்கப்பட்டார் அழகிரி. அப்போது மருத்துவ விஞ்ஞானம் வளர்ந்திடாத காலம். கடுமையான நோய்ப் பாதிப்பிற்கு உள்ளான நிலையில் 1948-ல். பெரியார் நடத்திய ஈரோடு மாநாட்டுக்கு வந்தார். " நான் கலந்துகொள்ளும் கடைசி மாநாடு இதுவாகத்தான் இருக்கும். எனது தலைவர் பெரியாரிடம் இருந்து விடைபெறுவதற்காக வந்தேன்'' என்று அவர் பேசிய போது அரங்கம் முழுவதும் கண்ணீர் விட்டது. சமூகத்தை செப்பனிட மாற்றத்தை நோக்கி இழுத்துச் செல்ல அழகிரி போன்ற எத்தனையோ உணர்வாளர்கள் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள். அந்த வரலாறுகளை இளைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இயக்கத்திற்கு எதிராக பார்ப்பனர்கள் மற்றும் அவரது கோடாரிக் காம்புகள் வந்து கொண்டே இருக்கிறார்கள். இது திராவிடர் இயக்கத்தின் காலம். கோடாரிக் காம்புகளையும் பார்ப்பனர்களை அம்பலப்படுத்த அஞ்சா நெஞ்சன் அழகிரிகள் நமக்கு உணர்வூட்டிக் கொண்டே இருக்கிறார்கள்.

# ஈழத்தமிழர்கள் குடியுரிமை மற்றும் கூட்டாட்சிக்கு திமுக குரல்!

***திமுகவின் தேர்தல் அறிக்கையில் ஈழத்தமிழர்களின் கூட்டாட்சிக்கு குரல் கொடுப்போம் என்று வலியுறுத்தியுள்ளது.*** *இலங்கைத் தமிழர்களின் அரசியல் சமூக உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது திமுக. இதற்காக ஆட்சியையே இழந்த வரலாறு திமுகவுக்கு உண்டு. இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலையில் இருந்து தப்பி, தமிழ்நாட்டில் 40 ஆண்டு-களுக்கும் மேலாகத் தங்கியுள்ள தமிழர்களுக்கு இருப்பிடம், கல்வி, மருத்துவம் போன்ற உதவிகளை மாநில அரசு வழங்கி வருகிறது. அகதிகள் முகாமை மறுவாழ்வு மையமாகப் பெயர் மாற்றம் செய்துள்ளது.*

*630 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10,469 வீடுகள் கட்ட அனுமதியளிக்கப்பட்டு, இதுவரையில் 5,920 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு முகாம் வாழ்மக்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக திராவிட மாடல் 2.0 ஆட்சியில்...*

● *2019-ஆம் ஆண்டு இந்திய அரசு கொண்டுவந்த குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின்படி, இலங்கைத் தமிழர்கள் குடியுரிமை கோரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்ற நிலைப்பாட்டைக் கைவிடுமாறு ஒன்-றிய அரசை தி.மு.க. வலியுறுத்துகிறது. இலங்கைத் தமிழ் மக்கள் குடியுரி-மைக்கு விண்ணப்பிக்கும்போது, அவர்களிடம் கடவுச்சீட்டு, நுழைவு அனுமதி போனறவற்றைக் கோராமல் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ள அடையாள அட்டையைச் சான்றாதாரமாக ஏற்க ஒன்றிய அரசை தி.மு.க. கோருகிறது.*

● *இலங்கைத் தமிழர்கள் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கவும் அதனைச் சரிபார்த்து மேல் நடவடிக்கை எடுத்திடவும் மாவட்ட அளவில் அதிகாரிகளை நியமிக்க தி.மு.க. கோருகிறது.*

● *இந்தியாவில் குடிபெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களின் சட்டப்பூர்வ நிலையைத் தெளிவாகக் கூறிட ஒன்றிய அரசை தி.மு.க. வலியுறுத்துகிறது.*

● *தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாக வசித்து வரும் இலங்கை தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கிட ஒன்றிய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்படும்.*

● *இலங்கையில் கொண்டுவரப்படும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களால் இலங்கைத் தமிழ்ச் சமூகத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு, இலங்கைத் தமிழர் உரிமைகளைப் பாதுகாத்திட உரிய தூதரக நடவடிக்கைகளை இந்திய அரசு உடனடியாக எடுக்க வேண்டும். பாரம்பரியமாக தமிழர்கள் வாழ்ந்து வந்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள மக்கள்தொகை மாற்றங்கள், நில அபகரிப்புகள், தமிழ் அடையாளத்தின் சிதைவு ஆகியவை தடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது.*

● *இலங்கைத் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு முழு அங்கீகா-ரத்தினை இலங்கை அரசு வழங்க ஒன்றிய அரசு மூலமாக வலியுறுத்துவோம். மலையகத் தமிழர் உட்பட அனைத்து குடிமக்களுக்கும் சமத்துவத்தையும் பாகுபாடின்மையையும் உறுதி செய்யும் ஒரு கூட்டாட்சி முறையை நிறுவ வலியுறுத்துவோம்.*

***- திமுக 2026 தேர்தல் அறிக்கையிலிருந்து..***

# திருநர் சமூகத்தை இழிவுபடுத்துகிறது மோடி அரசு!

*திருநங்கையர் உரிமைகள் பாதுகாப்பு திருத்த சட்டத்தை ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளது. இது திருநங்கைகளின் சுய-அடையாளத்தை (self-identity) உறுதிப்படுத்தும் உரிமையைப் பறிக்கிறது என திருநர் சமூகம் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. குறிப்பாக , இந்தத் திருத்தம், தனது பாலினத்தைத் தானே அடையாளப்படுத்திக் கொள்ளும் உரிமையைக் குறிப்பிட்டிருந்த 2019ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 4(2)ஐ நீக்கப் பரிந்துரைக்கிறது.*

*திருநர் சமூகத்தை குற்றவாளிகள் போல சித்தரிக்கும் தோற்றத்தையும் இந்த சட்டம் ஏற்படுத்தியிருக்கிறது. "வயது வந்தவர்களும் குழந்தைகளும் கடத்தப்பட்டு, கடுமையான உடல்ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். மேலும் அவர்கள் பல்வேறு விதமான நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டு, திருநர் அடையாளங்களை ஏற்கும்படி கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். பிற்காலத்தில் பிச்சை எடுத்தல் போன்ற செயல்கள் மூலம் அவர்களைச் சுரண்டுவதற்காகவே இது பெரும்பாலும் செய்யப்படுகிறது" என்று ஒன்றிய அரசாங்கம் கூறுகிறது. பொதுச்சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டு அனைத்து நிலைகளிலும் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படும் திருநர் சமூத்தை ஒரு அரசாங்கமே இவ்வளவு மோசமாகத்தான் மதிப்பிடுகிறது என்பது இந்த சட்டம் வெளிப்படுத்தியிருக்கும் முக்கிய அம்சமாக உள்ளது.*

*மேலும், 2019ஆம் ஆண்டு சட்டத்தின்படி, எந்தவொரு நபரும் மாவட்ட ஆட்சியரிடம் இருந்து நேரடியாக திருநர் அடையாள அட்டையைப் பெறலாம். தற்போது முன்மொழியப்பட்டுள்ள திருத்தத்தின்படி, இனி முதலில் மருத்துவ கண்காணிப்பாளர் அல்லது தலைமை மருத்துவ அதிகாரியிடம் இருந்து ஒரு மருத்துவச் சான்றிதழைப் பெற வேண்டும். இந்தச் சான்றிதழுடன் மாவட்ட ஆட்சியரிடம் ஒரு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். சரிபார்ப்பு முடிந்த பின்னரே மாவட்ட ஆட்சியர் திருநர் அடையாள அட்டையை வழங்குவார். மருத்துவமனை நிர்வாகம் இனி பாலின அடையாளம் தொடர்பான அறுவை சிகிச்சைகள் குறித்த தகவல்களை நேரடியாக மாவட்ட ஆட்சியரிடம் வழங்க வேண்டும். இது திருநராக ஒருவரை பதிவு செய்யும் நடைமுறையையே மிக சிக்கலானதாகவும், சவாலானதாகவும் மாற்றுகிறது. ஒருவர் தன் பாலினத்தை மாற்றிக்கொள்வதே மனதளவிலும், உடலளவிலும் மிகக்கடுமையான சவால்களை கொண்டது. அதை கடந்து வரவே அவர்கள் சமூகத்திலும் குடும்பத்திலும் தன்னளவிலும் மிகக்கடுமையான போராட்டங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.*

*அப்படி, சவால்களை போராட்டங்களை எதிர்கொண்டு பாலினம் மாறுவோரை அலைக்கழிப்பு செய்து மனரீதியாக அவர்களைத் துன்புறுத்துவதுதான் இந்த சட்டத்தால் நடக்கப்போகிறது. அவர்களை அரவணைத்து, துயர் துடைக்க வேண்டிய அரசாங்கமே அவர்களை சோதிப்பது உலகில் வேறு எங்குமே நடக்காத மிகப்பெரும் கொடுமை. திருநர் சமூகத்திடம் எந்தவொரு கருத்துக்களையும் கேட்காமலேயே இப்படியொரு சட்டத்தை உருவாக்கியிருக்கிறது ஒன்றிய அரசு. நாடு முழுவதும் திருநர் சமூகம், சமூக செயற்பாட்டாளர்கள் பலரும் இந்த சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டுமென டெல்லி ஜந்தர்மந்தரில் போராடி வருகின்றனர். நாடு முழுவதும் உள்ள திருநர், திருநங்கைகள், பால்புதுமையினர் உள்ளிட்ட அனைவரும் எதிர்த்து வருகின்றனர். திருநங்கைகளுக்கான தேசிய கவுன்சில் உறுப்பினர்கள் கல்கி சுப்ரமணியம், ரிதுபர்ணா நியோக் ஆகியோர் பதவியை ராஜினாமா செய்து தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.*

*"பாதுகாப்பு என்ற பெயரில் உருவாக்கப்பட்ட ஒரு சட்டத்தை அந்தச் சமூகமே எதிர்க்கும்போது, அது திணிப்பாக இருக்கக்கூடாது; மாறாக, மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். ஒன்றிய பாஜக அரசு இந்தத் திருத்தங்களை முன்னெடுப்பதற்கு முன், சற்று நிதானித்து, திருநங்கைகளுடன் கலந்துரையாடி, அவர்களின் உண்மையான உடன்பாட்டைப் பெற வேண்டும்." என்று தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் வலியுறுத்தியுள்ளார். ஒன்றிய அரசு சிந்திக்க வேண்டும், முடிவை பரிசீலனை செய்ய வேண்டும்.*

# தேர்தல் களம்; மக்களிடம் கூறுவோம்

## தமிழ்நாட்டு அரசியல் களங்களின் தொகுப்பு:

### அண்ணனுக்கும் ஆலோசகருக்கும் இடையே நடக்கும் ஓர் கற்பனை உரையாடல்:

*அண்ணன்:* ஏம்பா ஆட்சியில பங்கு தருவோம் என்று நீங்கதான் பேச சொன்னீங்க, இப்ப ஒரு கட்சியும் திரும்பிப் பார்க்கல்ல. இந்த லட்சணத்துல எனக்குதான் மக்கள் ஆதரவுன்னு பேச சொல்றீங்க மக்கள் நம்புவார்களா?

**ஆலோசகர்:** *கவலைப்படாதீங்க அண்ணே! ; மக்களை நம்ப வைக்கிறதுக்கு நம்ம கிட்ட ஒரு அய்டியா இருக்கு.*

*அண்ணன்:* என்ன அய்டியா?




**ஆலோசகர்:** *அப்படி கேளுங்க."எனக்கும் ஸ்டாலினுக்கும் தான் போட்டி"அப்படின்னு அடிச்சு பேசுங்க எட்டு கட்டையில ஒங்கி பேசணும்.*

*அண்ணன்:* இப்படி பேசினா மக்கள் நம்புவாங்களா? இப்படி பேசினதுக்கு அப்புறம் தான் எடப்பாடியை எதிர்க்க வச்சிட்டீங்க; "அதோ பார் விஜய் கொடி பறக்குது" அப்படின்னு புல்லரிக்க பேசினவர், இப்போ நடிகர்களை நம்பாதீங்கன்னு பேச ஆரம்பிச்சுட்டாரு. இதுதான் மிச்சம்!

**ஆலோசகர்:** *அத விடுங்க அண்ணே... அவர் எதிர்த்தால் என்ன? பாஜக நம்மை எதிர்க்கக் கூடாது; அதுதான் முக்கியம். ஸ்டாலின் மாதிரி பாஜகவுக்கும் நமக்கும் தான் போட்டி என்று பேசக்கூடாது. அதுதான் நமக்கு ஆபத்து!*

*அண்ணன்:* சரி; நான் அப்படியே ஒத்துக்குறேன். இப்ப தேர்தல் ஆணையத்திடம் தான் அதிகாரம் இருக்கு. அந்த ஆணையம் சட்ட விதிகளைக் காட்டி நமக்கு நெருக்கடி கொடுக்குது. இந்த ஆணையத்தை கண்டித்தால் பாஜகவுக்கு கோபம் வந்துடும். அதுக்காக திமுக தான் பழிவாங்குதுன்னு பேச சொல்றீங்க. மக்கள் நம்புவாங்களா?

**ஆலோசகர்:** *மக்கள் நம்பறதா இப்ப முக்கியம்? நமக்கு ஓட்டு போடுற ரசிகர்கள் நம்பினால் போதும். நிச்சயமா நம்புவாங்க அண்ணே! இப்ப சங்கீதா விவாகரத்து கேட்டதுக்கு அப்புறமும், பெண்கள் பாதுகாப்பு பற்றி நீங்க பேசுறீங்க இல்ல அதை நல்லா நம்புறாங்களே! இதுக்கு என்ன சொல்றீங்க ?*

*அண்ணன்:* சரிதான் ; நீங்க சொல்றத நான் அப்படியே நம்புறேன். இப்ப இரண்டு தொகுதியில போட்டியிட வச்சுட்டீங்க; ஒரு தொகுதி பிரச்சாரத்திலேயே மூச்சு வாங்குது; பாதியிலேயே நிறுத்தியாச்சு. இதுல ரெண்டு தொகுதிக்கு எப்படி பிரச்சாரம் செய்யறது? இதுதான் சந்தர்ப்பம்! இனிமே என்ன நேரா பார்க்க முடியாதுன்னு மக்கள் வேடிக்கை பார்க்க கூடுறாங்க. அப்படியே தப்பித் தவறி எம்.எல்.ஏ ஆயிட்டேன்னா, உங்களை எப்படி நேரில் சந்திப்பதுன்னு மக்கள் கேக்குறாங்க. அதுக்கு என்ன பதில் சொல்றது?

**ஆலோசகர்:** *இருக்கவே இருக்கு நமது பனையூர் பங்களா. அங்க மக்கள வர சொல்லிடுவோம்!*

*அண்ணன்:* இந்த யோசனை எனக்கு ரொம்ப புடிச்சிருக்கு! பனையூர் பங்களாவையே மக்கள் தொடர்பு மய்யமாக மாத்திடலாம். ஆனா இன்னொரு கேள்வியை கேப்பாங்களே. அந்த பங்களாவுக்குள்ளேயே குடும்பத் தொடர்பே இல்லாத நீங்க எப்படி மக்கள் தொடர்பை உருவாக்கப் போறீங்க? அப்படின்னு கேட்டா என்ன சொல்றது? இதுதான் நெஞ்ச பதற வைக்குது!

**ஆலோசகர்:** *இதெல்லாம் ஒரு பிரச்சனையா? விடுங்க அண்ணே.. முதல்ல ஆட்சியை பிடிக்கணும் அதுதான் முக்கியம்.*

*அண்ணன்:* நம்ம கட்சியில போட்டியிடுவதற்கே உங்களால் ஆட்களை பிடிக்க முடியல; படாத பாடுபட்டோம் ஆட்சியைப் பிடிப்பத பத்தி பேச கிளம்பிட்டீங்க. மத்த கட்சியில இடம் கிடைக்காதவங்க தான் வேற வழி இல்லாம கடைசி நேரத்துல நம்ம கிட்ட வந்தாங்க. சுமார் 100 பேர அப்படியே அமுக்கி புடிச்சு வேட்பாளரா அறிவிச்சிட்டோம்; இதுல எப்பட ஆட்சியை பிடிப்போம்னு நம்ப சொல்றீங்க?

**ஆலோசகர்:** *இதெல்லாம் ஒரு மேட்டரே இல்லை. ஒரே ஒரு டயலாக் இருக்கு. அத சொல்லுங்க போதும்; "எல்லாத்தையும் விட்டுட்டு உங்களை நம்பித்தான் வந்து இருக்கேன்னு" ஒரு வார்த்தை சொல்லுங்க. அப்படியே மக்கள் வாக்குகளை குவிச்சுடுவாங்க*

*அண்ணன்:* 624 கோடி ரூபாய் சொத்து இருக்குன்னு தேர்தல் ஆணையத்திடம் தெரிவிச்சி இருக்கேன். கடைசி 5 வருடத்தில் கிடைச்ச வருமானம் மட்டும் 234 கோடிரூபாய். இது வருமான வரித்துறையிடம் காட்டிய கணக்கு. தேர்தல் ஆணையத்திடம் மறைக்க முடியாது. உண்மையிலேயே உழைச்சி சம்பாதிச்சா இவ்வளவு கோடி கிடைக்குமான்னுமக்கள் கேட்பாங்கல்ல? நம்ம கட்சி மட்டும் ஊழலை ஒழிக்கப் போற தனித்துவமான கட்சியின்னு எப்படி சொல்றது?

**ஆலோசகர்:** *விடுங்க அண்ணே.. கவலைப்படாமல் போய் தூங்குங்க "அரசியலில் இதெல்லாம் சாதாரணம்"*

**கோடங்குடி மாரிமுத்து.**

## வாக்குறுதிகளை நிறைவேற்றியது திமுகவா? அஇஅதிமுகவா?

*அதிமுக நிறைவேற்றிய தேர்தல் வாக்குறுதிகள் மற்றும் திமுக நிறைவேற்றிய வாக்குறுதிகள் ஒரு ஒப்பீடு.*

- *எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராக இருக்கின்ற பொழுது மடிக்கணினி திட்டம் நிறுத்தப்பட்டது., 2018- 2019-லேயே மாணவர்கள் போராடினார்கள். மதுரையில் லேப்டாப்பை கொடுங்க, அந்த அம்மா கொடுத்தார்கள் நீங்க கொடுங்க என்று கேட்டார்கள். வழங்கவில்லை.*

***திமுக அரசு வழங்கியது. 20 இலட்சம் மாணவர்களுக்கு வழங்கியது.***

- *5 ஆண்டுகளில் 2016 -2021 வரைக்கு எந்த அத்தியாவசிய பொருட்களின் விலையை அதிமுக ஆட்சி குறைக்கவில்லை.*

***திமுக ஆட்சிக்கு வந்தவுடன் ஆவின் பால் விலையில் லிட்டருக்கு 3 ரூவாயும், பெட்ரோல் விலையில் லிட்டருக்கு 3 ரூபாயும் குறைத்தது திராவிட மாடல் அரசு.***

- *தேவைக்கேற்ப சிறுபான்மையிருக்கான விடுதிகள் துவக்கப்படும். அதிமுக தேர்தல் அறிக்கையில் கூறியது*

***தொடங்கினார்களா! இல்லை. தற்போது திமுக அரசு ஹ்ஜ் பயணிகளுக்கான விடுதிக்கு அடிக்கல் நாட்டி பணிகள் நடைபெற்று வருகிறது.***

- *பெண்களுக்கு பாதுகாப்பு விடுதிகள் கொண்டுவரப்படும் என்றது அதிமுக தேர்தல் அறிகை*

***சொன்னார்கள். ஆனால் செய்யவில்லை. திமுக அரசு தோழி விடுதியை அமைத்து, தமிழ்நாட்டின் மூலை முடுக்குகள் எல்லாம் இருந்து பெண்பிள்ளைகள் பாதுகாப்பாடு இன்றைக்கு அங்கே தங்கி பணிபுடிந்து கொண்டிருக்கிறார்கள்.***

- *மாற்றுத்திறாளிகளுக்கு சம வாய்ப்புகள் ஏற்படுத்தி தருவதற்கும் அவர்களின் முழு பங்கேற்பை உறுதி செய்வதற்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றது அதிமுக தேர்தல் அறிகை*

*செய்தார்களா இல்லை. மாறாக போராடிய மாற்றுத்திறானாளிகள் கண்பார்வையற்ற மாற்றுத்திறானாளிகளை பேருந்தில் கொண்டு போய் சென்னைக்கு வெளியில் சுடுகாட்டில் இறக்கி விட்டது அதிமுக.*

***ஆனால் திமுக தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் நேரடி நியமனமாக மாற்றுத்திறனாளிகள் போட்டியின்றி உள்ளாட்சி, நகராட்சி அமைப்புகளில் பங்கேற்கலாம் என்ற சட்டத்தை கொண்டு வந்து ஆயிரக்கணக்கானோர் அதில் பயன்பெற்றுள்ளனர்.***

- *மீனம்பாக்கம் முதல் செங்கல்பட்டு வரை உயர்நிலை மேம்பாலங்கள் அமைக்கப்டும் - அதிமுக தேர்தல் அறிகை*

***செய்தார்களா. இல்லை ஆனால் திமுக தேனாம்பேட்டை முதல் கிண்டி வரை உயர்நிலை மேம்பாலம் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது. பெருங்களத்தூரில் மேம்பாலபணி நடைபெற்று வருகிறது.***

- *போக்குவரத்து கழகங்களுக்கு புதிய பேருந்து வாங்கப்படும்.புதிய வழித்தடங்களுக்கு விடப்படும் அதிமுக தேர்தல் அறிகை.*

***ஆனால் வாங்கவும் இல்லை. ஆனால் திமுக நகரங்களில் பல அதிநவீன வசதிகளுடன் கூடிய மின்சாரப் பேருந்து, தாழ்தளப் பேருந்து, வெளி மாவட்டங்களுக்கு செல்ல சொகுசு பேருந்து (Volvo Bus).***

- *சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்துர் ஆகிய இடங்களில் மோனோ ரெயில் திட்டம் செய்யப்படுத்தப்படும் - அதிமுக தேர்தல் அறிகை*

***செயல்படுத்தவும் இல்லை. மாறாக மதுரை கோவை மெட்ரோ திட்டத்திற்கு அனுமதிக் தராத பாஜக அரசை வலியுறுத்தக் கூடவில்லை.***

- *தமிழ்நாட்டில் விளையாட்டு மற்றும் இளைஞர்கள் நலனில் சிறந்த மாநிலமாக உருவாக்கப்படும். அதிமுக தேர்தல் அறிகை*

***10 ஆண்டுகளில் எதுவும் செய்யவில்லை. மாறாக 44 ஆவது செஸ் சர்வதேச செஸ் ஒலிம்பியாட்டை நடத்திக் காட்டியவர் உதயநிதி ஸ்டாலின். மகளிர் டென்னிஸ் போட்டி, கேளோ இந்தியா, ஜூனியர் உலகக்கோப்பை, பார்முலா கார் பந்தையங்கள் என தமிழ்நாட்டை விளையாட்டுப் போட்டிகளின் தலைநகரமாக மாற்றியுள்ளது திமுக.***

- *தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கு காலைச் சிற்றுண்டி வழங்கப்படும் அதிமுக தேர்தல் அறிகை*

***ஆனால் 10 ஆண்டுகளில் வழங்கவில்லை. திமுக அரசு அதை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. கனடா நாடு பாராட்டியுள்ளது.***

- *36 பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்துவது குறித்து ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் அறிக்கை பெறப்பட்டு பழைய ஓய்வூதிய திட்டமே தொடர்ந்து நீடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் - அதிமுக*

***ஆனால் வல்லுநர் குழுவைக் கூட அமைக்கவில்லை. ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்தவும் இல்லை. மாறாக திமுக அரசு தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் (TAPS) என்றத் திட்டத்தைக் கொண்டு வந்து ஓய்வூதியத்தை உறுதி செய்திருக்கிறது.***

***ஊடவியலாளர் செந்தில்வேல்***

## கலால் வரி குறைப்பு யாருக்காக?

*பெட்ரோல் டீசலுக்கான கலால் வரியை அவசர அவசரமாக குறைத்து இருக்கிறது ஒன்றிய ஆட்சி. டீசலுக்கு முழுமையாக கலால் வரி ரத்தாகி இருக்கிறது. பெட்ரோலுக்கு 13 ரூபாயிலிருந்து மூன்று ரூபாயாக குறைத்து இருக்கிறது. போர் நெருக்கடியால் பாதிக்கப்பட்ட எண்ணெய் நிறுவனங்களுக்காக கண்ணீர் சிந்தி இந்த விலை குறைப்பு நடவடிக்கையை ஒன்றிய ஆட்சி எடுத்து இருக்கிறது. மக்கள் பயன்பாட்டுக்கான பெட்ரோல் டீசல் விலை குறையாது; அப்படியே நீடிக்கும்.*

*இதில் வேடிக்கை என்னவென்றால் பெட்ரோல் டீசல் பிரச்சினை குறித்து ஆராய்வதற்கு முதலமைச்சர் மாநாட்டை மோடி கூட்டுவதாக அறிவித்து, மாநாடு கூடுவதற்கு முன்பே இந்த முடிவை ஒன்றியஆட்சி எடுத்திருப்பது தான். முக்கிய முடிவுகளை எடுத்து விட்டு பிறகு முதலமைச்சர்கள் மாநாட்டை ஏன் கூட்ட வேண்டும்? தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் இதில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று அறிவித்து விட்டார். ரஷ்யாவில் இருந்து மிகக்குறைந்த விலையில் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்த காலத்திலும் ஒன்றிய ஆட்சி பெட்ரோல் டீசல் விலையைக் குறைக்கவில்லை.*

*மாறாக அம்பானியின் எண்ணெய் சுத்திகரிப்பு வணிகம்தான் இதனால் பெரும் பயன் அடைந்தது. சுத்திகரித்த பெட்ரோல், டீசலை அம்பானி நிறுவனம் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து கொள்ளையடித்தது. தமிழ்நாட்டு வாக்காளர்களிடம் ஒன்றிய ஆட்சியின்" சாதனைப் பெருமைகளை" பேசத் துவங்கி உள்ள எடப்பாடி கூட்டணி இதற்கு என்ன பதிலை கூறப் போகிறது?*

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

## திராவிட மாடல் 2.0 ஆட்சியை உறுதி செய்வோம்!

# சென்னையில் சுற்றிச்சுழன்று கழகம் பரப்புரை!

**சென்னை மாவட்டக் கழகங்களின் (தென்சென்னை, வடசென்னை) சார்பில் "தொடரட்டும் தமிழ்நாட்டில் சாதனைகள்...திமுக ஆட்சியை உறுதிசெய்வேம்! என்ற தலைப்பில் தினமும் 2 கூட்டங்கள் என 30 கூட்டங்களை நடத்தியுள்ளனர். அரசியல் நையாண்டி, பாடல்கள் என கலைநிகழ்ச்சிகளுடன் மக்கள் மத்தியில் திமுக ஆட்சியை ஏன் ஆதரிக்க வேண்டும் என்று விளக்கி வருகின்றனர். தோழர்கள் இரா. உமாபதி – சத்யா – கார்மேகம் – பொன்ராஜ் குழுவினரின் இசை நிகழ்ச்சிகள் தொய்வில்லாமல் மூன்று வாரங்கள் நடைபெற்றன. தெருமுனைக் கூட்டங்களின் தொகுப்பு:**

**மார்ச் 3 முதல் மார்ச் 9 வரையிலான 12 கூட்டங்களை, ம.கி. எட்வின் பிரபாகரன் (மாவட்ட அமைப்பாளர்) – இரண்யா ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.**

**மார்ச்-4:** மாலை 5 மணிக்கு, பிரீத்தி தலைமையில், மடிப்பாக்கம் பேருந்து நிலையத்திலும், மாலை 7 மணிக்கு, அபிநந்தன் தலைமையில், கீழ்க்கட்டளை பெரிய தெருவிலும், தெருமுனைக்கூட்டங்கள் நடைபெற்றன.கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், U2BRUTUS மைனர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

திமுக: மடிப்பாக்கம் 187வது வட்டச் செயலாளர் எம்.கே.ஜெய் இரவு உணவை ஏற்பாடு செய்து கொடுத்தார். மடிப்பாக்கம் 188-வது வட்டப் பொருளாளர் த. அன்பரசன், சிற்றுண்டி வழங்கினார். சோழிங்கநல்லூர் தி.க மாவட்டத் தலைவர் பாண்டு, மடிப்பாக்கம் ஜெயராமன் (தி.க), எஸ். அரிகிருஷ்ணன் (திமுக தென்சென்னை மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர், மடிப்பாக்கத்தார்), விமல் (திமுக 188-வது வட்ட இளைஞரணி பொறுப்பாளர்), திமுக 187-வது வட்ட பகுதிப் பிரதிநிதிகள் என். வி. ஆனந்தகுமார், சி. நூக்கப்பிள்ளை, செல்வராஜ் (மடிப்பாக்கம் குடியிருப்போர் நலச்சங்க நிர்வாகி), லெனின் (சி.பி.அய்), கி. மலையமான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**மார்ச்-5:** மாலை 5 மணிக்கு, குருபிரசாத் தலைமையில், தரமணி 5சி பேருந்து நிலையத்திலும், மாலை 7 மணிக்கு, முழக்கம் உமாபதி தலைமையில், பெருங்குடி அண்ணா நெடுஞ்சாலையிலும் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன. கு. அன்பு தனசேகர் (கழகத் தலைமைக் குழு உறுப்பினர்), பேரன்பு (தமிழ்நாடு மாணவர் கழக சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்) ஆகியோர் உரையாற்றினர். **தோழர் முனியன் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.**



**மார்ச்-6:** மாலை 5 மணிக்கு, மடிப்பாக்கம் அருண் தலைமையில், புழுதிவாக்கம் மெயின் ரோட்டிலும், மாலை 7 மணிக்கு, ஆதம்பாக்கம் அம்பேத்கர் சிலை அருகிலும் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன. ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி, தாம்பரம் நகர அமைப்பாளர் அருண் கோமதி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

திமுக: கே.ஆர். ஜெகதீஸ்வரன் (ஆதம்பாக்கம் 165வது வட்டச் செயலாளர்), டி.ஆர்.எம். மணிகண்டன் (காஞ்சி வடக்கு மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர்), கணேஷ் (சோழிங்கநல்லூர் தொகுதி மருத்துவர் அணி அமைப்பாளர்), பால்ராஜ் (இளைஞரணி), ராமசாமி (கோவிலம்பாக்கம்) ஆகியோரும் முனுசாமி (தி.க), AISCST ஓய்வுபெற்ற வங்கி ஊழியர்கள் சங்க நிர்வாகி ஆனந்தராஜ், பெரியார் பற்றாளர்கள் இயக்கத்தைச் சேர்ந்த நங்கநல்லூர் கார்த்திகேயன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

**மார்ச்-7:** மாலை 5 மணிக்கு, இரண்யா தலைமையில், வேளச்சேரி நேதாஜி சாலையிலும், மாலை 7 மணிக்கு, நிமிர்வோம் வாசகர் வட்ட அமைப்பாளர் (தென்சென்னை) இம்மேனுவல் துரை தலைமையில், வேளச்சேரி காந்தி சாலையிலும், தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன. ஊடகவியலாளர்கள் ரவுத்திரா , பாட்டர் ஆகியோர் உரையாற்றினர். ரவுத்திரா ஆற்றிய உரை பொதுமக்கள் பலரை ஈர்த்தது. பெண்களுக்கு திமுக அரசு செய்து வருகிற சாதனைகளை தனது பாணியில் எடுத்துரைத்தார்.

**மார்ச்-9:** நங்கநல்லூர் பெரியார் – அண்ணா சிலைகளுக்கு சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி மாலை அணிவித்த பின், மாலை 5 மணிக்கு, தினியா தலைமையில் நங்கநல்லூர் எம்.ஜி.ஆர் சாலையிலும், மாலை 7 மணிக்கு, ம. குகானந்தன் தலைமையில், நங்கநல்லூர் 48-வது தெருவிலும் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன. பேரன்பு சிறப்புரையாற்றினார். எட்வின் பிரபாகரன் இரவு உணவை ஏற்பாடு செய்தார்.

சிபிஎம் பகுதிக் குழு உறுப்பினர் வெங்கடேசன், சுகுமார் (தமிழ் சிந்தனையாளர் பேரவை), திமுக: மாவட்ட பிரதிநிதி வெங்கடேசன், கண்ணன், திமுக ஆட்டோ ஓட்டுனர்கள், மமக பகுதிச் செயலாளர் சாகுல் ஹமீது, டெய்லர் பிரபு உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். அனைத்து கூட்டங்களிலும், இரா. உமாபதி – லதா – கார்மேகம் – பொன்ராஜ் – சத்யா குழுவினரின் இசை நிகழ்ச்சி பெரும் வரவேற்பைப் பெற்றது.

**மார்ச்-10:** மாலை 5 மணிக்கு, லட்சுமணன் தலைமையில், தியாகராய நகர் மதுரைவீரன் கோயில் அருகிலும், மாலை 7 மணிக்கு, PTC வெங்கடேசன் தலைமையில், முத்துரங்கன் சாலையிலும் (ஞானவாபி அருகே), தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன. தலைமைக் குழு உறுப்பினர் கு. அன்பு தனசேகர், ராஜா (தமிழ்தேச மக்கள் கட்சி), மாவட்ட இளைஞரணி ஒருங்கிணைப்பாளர் ஜெயபிரகாஷ் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

அன்னை மணியம்மையார் பிறந்தநாளையொட்டி, படத்திற்கு மாலை அணிவித்து தோழர்கள் முழக்கமிட்டனர். சாவித்ரி பாய் பூலே நினைவுநாளும் அனுசரிக்கப்பட்டது. விசிக வட்டச் செயலாளர் ரமேஷ், கண்ணன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**மார்ச்-11:** மாலை 5 மணிக்கு, அ. அறிவுமதி தலைமையில், அரங்கநாதன் சுரங்கப்பாதை அருகிலும், மாலை 7 மணிக்கு, சைதை சிவா தலைமையில், கங்கையம்மன் கோயில் அருகிலும், தெருமுனைக்கூட்டங்கள் நடைபெற்றன. தபசி குமரன் (தலைமை நிலையச் செயலாளர்) ஒருங்கிணைத்தார். ம.கி. எட்வின் பிரபாகரன் (சென்னை மாவட்ட அமைப்பாளர்), அ. அறிவுமதி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

**மார்ச்-12:** மாலை 6 மணிக்கு, புகழேந்தி தலைமையில், எம்.ஜி.ஆர் நகர் சந்தையில் தெருமுனைக்கூட்டம் நடைபெற்றது. துரைராசு (எம்.ஜி.ஆர் பகுதி அமைப்பாளர் ) ஒருங்கிணைத்தார். கு. அன்பு தனசேகர் (தலைமைக்குழு உறுப்பினர்), U2BRUTUS ஞான சத்யா, கழகப் பேச்சாளர் மகிழவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். **துரைராசு 10 முழக்கம் சந்தாதொகை ரூ.3,000 வழங்கினார்.**

**மார்ச்-13:** மாலை 5 மணிக்கு, மனோஜ்குமார் தலைமையில், சிவகாமி அம்மையார் காலனி 6வது தெருவிலும், மாலை 7 மணிக்கு, இராசேந்திரன் (வடசென்னை மாவட்டத் தலைவர் சேத்துப்பட்டு) தலைமையில், எம்.கே.பி நகர் மேற்கு அவென்யூ – 2A பேருந்து நிலையத்திலும், தெருமுனைக்கூட்டங்கள் நடைபெற்றன. ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி, ர. பிரகாசு (நிமிர்வோம் வாசகர் வட்ட ஒருங்கிணைப்பாளர்) சிறப்புரையாற்றினார். மனோஜ்குமார் இரவு உணவை ஏற்பாடு செய்தார்.




திமுக: 36வது வட்ட திமுக மாமன்ற உறுப்பினர் A R.R. மலைச்சாமி, M. பூங்கோதை (சென்னை வடக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்), இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத் தோழர்கள் பிரகாஷ், கார்த்திக் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**மார்ச்-17:** மாலை 5 மணிக்கு, சஞ்சய் தலைமையில், கொளத்தூர் ஹரிதாஸ் மெயின் ரோடு அம்பேத்கர் சிலை அருகிலும், மாலை 7 மணிக்கு, விஜய பிரதாபன் தலைமையில், பெரம்பூர் அகரம் – சந்தரபெருமாள் கோயில் தெரு, காந்தி சிலை அருகிலும், தெருமுனைக்கூட்டங்கள் நடைபெற்றன. ந. தட்சிணாமூர்த்தி (மாவட்ட அமைப்பாளர்) ஒருங்கிணைத்தார். மைனர் (U2BRUTUS), சேத்துப்பட்டு இராசேந்திரன் (வடசென்னை மாவட்டத் தலைவர்), தமிழ்ச்செல்வி, பாட்டர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

**மார்ச்-18:** மாலை 6 மணிக்கு, இளவரசன் தலைமையில், சேத்துப்பட்டு அம்பேத்கர் மைதானம் அருகில், தெருமுனைக்கூட்டம் நடைபெற்றது. ராஜன் (சேத்துப்பட்டு பகுதி அமைப்பாளர்) ஒருங்கிணைத்தார். சேத்துப்பட்டு இராசேந்திரன் (வடசென்னை மாவட்டத் தலைவர்), ம.கி. எட்வின் பிரபாகரன் (மாவட்ட அமைப்பாளர்), கழகப் பேச்சாளர் மகிழவன், இரண்யா ஆகியோர் சிறப்புரையாற்றினர். ராஜன் இரவு உணவை ஏற்பாடு செய்தார்.

**மார்ச்-19:** மாலை 5 மணிக்கு, வெங்கடேசன் தலைமையில், அடையாறு சாஸ்திரி நகர் தாமோதரபுரம் மெயின் ரோடு சந்திப்பிலும், மாலை 7 மணிக்கு, அஜித் தலைமையில் திருவான்மியூர் நாகாத்தம்மன் கோயில் அருகிலும், தெருமுனைக்கூட்டங்கள் நடைபெற்றன. முழக்கம் உமாபதி (பகுதி அமைப்பாளர்) ஒருங்கிணைத்தார். பாரி சிவா, இரா. உமாபதி (மாவட்டச் செயலாளர்) நிமிர்வோம் வாசகர் வட்ட அமைப்பாளர்கள் பிரசாந்த் – இம்மேனுவல் துரை ஆகியோர் உரையாற்றினர். வேணுகோபால் (விழிகள் பதிப்பகம்) இரவு உணவை ஏற்பாடு செய்தார். திமுக: முன்னாள் பகுதிச் செயலாளர் துரை கபிலன், 174வது வட்டச் செயலாளர் பி. ராஜி, சுரேஷ் சபா, தமிழ் MS (இளைஞரணி) உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**மார்ச் 20:** மாலை 5 மணிக்கு குடிஅரசு தலைமையில், பட்டாளம் மார்கெட்டிலும், மாலை 7 மணிக்கு, விஜயன் தலைமையில் புளியந்தோப்பு மோதிலால் தெருவிலும் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன. ந. தட்சிணாமூர்த்தி (மாவட்ட அமைப்பாளர்) ஒருங்கிணைத்தார். இரா. உமாபதி (மாவட்டச் செயலாளர்), தினகரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.



**மார்ச்-21:** மாலை 6 மணிக்கு, திருவல்லிக்கேணி பகுதி அமைப்பாளர் த.நா.சூர்யா தலைமையில், திருவல்லிக்கேணி என்.கே.டி பள்ளி அருகில், தெருமுனைக்கூட்டம் நடைபெற்றது. சு. கோபிநாத் (பகுதித் தலைவர்), சே. ராஜேஷ் (பகுதிச் செயலாளர்) ஆகியோர் ஒருங்கிணைத்தனர். இரண்யா, ஊடகவியலாளர்கள் ஞான சத்யா, கவிதா ஆகியோர் உரையாற்றினர்.

தொடர் பரப்புரையில் கழகத் தோழர்கள் மா. வேழவேந்தன் (மாவட்டத் தலைவர்), ப.அருண் (மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்), சுகுமார், மயிலை மனோகர், சு. கோபிநாத் (திருவல்லிக்கேணி பகுதித் தலைவர்), த.நா. சூர்யா (பகுதி அமைப்பாளர்), அஜித், குமார், பிரபாகரன் (சேலம் இளைஞரணி), சேலம் இளவரசன், மாணிக்கம், அசோக், மயிலை அருண், வீரா, மேட்டூர் முத்துராஜ், புகழேந்தி, சிபி, புருஷோத் அப்பு, கிரிஸ்டோ, இராவணன் (மாவட்டத் துணைச்செயலாளர்), சிவா – ப்ரவீன் aks, புருஷோத்தமன், சிகாமணி, யாழினி, கனிகா செல்வன், ஜெயந்தி, ஸ்ரீலேகா, லட்சுமணன், அருள்தாஸ், மஞ்சுநாதன், அகராதி, பிரீத்தி, , நிரஞ்சன், குறளரசி, யுவலதா, தினியா உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : April 02, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran